# நிதி ஆணைக்குழுவின் செயலாற்றுகை

**(2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி முதல் மார்ச் 31 ஆம் திகதி வரை)**

நிதி ஆணைக்குழுவினது இச்செயலாற்றுகை அறிக்கையானது 2018 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் 01ஆம் திகதி முதல் மார்ச் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நிதி ஆணைக்குழுவின் பிரதான செயற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

**01. மூலதன மற்றும் மீண்டெழும் செலவினத் தேவைகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான பாதீட்டு வழிகாட்டிகளை மாகாணங்களுக்கு அனுப்புதல்**

ஒவ்வொரு வருடமும் நிதிஆணைக்குழுவானது மாகாணங்களுக்கு அவர்களின் மூலதன மற்றும் மீண்டெழும் தேவைகளை மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டல்களை வழங்குகிறது. இந்நோக்கத்திற்காக மாதிரி படிவங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டுக்கான மதிப்பிட்டத்தேவைகளுக்கான வழிகாட்டல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் மூலதன மற்றும் மீண்டெழும் செலவுகளுக்கான மதிப்பீட்டுத்தேவைகள் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்க முன் நிதிஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**02. மாகாணங்களில் இருந்து 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அபிவிருத்தித்திட்டங்களைப் பெற்றுக்கொள்ளல்**

இவ் வருடம் நிதி ஆணைக்குழுவினது தலைவர் செயலாளர் மற்றும் தொடர்புடைய அதிகாரிகள் மாகாணங்களுக்கான விஜயத்தினை மேற்கொண்டு மாகாணங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித்திட்டங்களை மீளாய்வு செய்தனர். பிரதம செயலாளர்கள் பொறுப்பான அமைச்சின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத்தலைவர்கள் இக்கூட்டத்தில் பங்குபற்றினார்கள்.

| | |
|---|---|
| • மேல்மாகாணம் | 26ஆம் திகதி பெப்ரவரி 2018 |
| • கிழக்கு மாகாணம் | 2ஆம் திகதி மார்ச் 2018 |
| • வட மேல் மாகாணம் | 5 ஆம் திகதி மார்ச் 2018 |
| • தென் மாகாணம் | 9 ஆம் திகதி மார்ச் 2018 |
| • மத்திய மாகாணம் | 14 ஆம் திகதி மார்ச் 2018 |
| • சப்பரகமுவ மாகாணம் | 15 ஆம் திகதி மார்ச் 2018 |
| • ஊவா மாகாணம் | 19 ஆம் திகதி மார்ச் 2018 |
| • வட மாகாணம் | 26 ஆம் திகதி மார்ச் 2018 |
| • வட மத்திய மாகாணம் | 27 ஆம் திகதி மார்ச் 2018 |

மாகாண விஜயத்தின் போது தெரிவு செய்யப்பட்ட சில படங்கள்

கிழக்கு மாகாணம்



பெறுமதி சேர் செய்முறை அலகு உருவாக்கல் மற்றும் செயல் விளக்கம்

வட மாகாணம்



தலைமன்னார் வைத்தியசாலை

மத்திய மாகாணம்



பௌதீக வாயு அலகு – பல்லேகல

வட மேல் மாகாணம்



சுற்றுலா பாடசாலை

சில திட்டங்கள் தொடர்பான விவகாரங்களை கண்காணிக்க சிறப்பு வலியுறுத்தல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

### 3. மாகாண வருடாந்த அபிவிருத்தி திட்டங்களுக்கு இணக்கப்பாட்டினை வழங்குதல்

நிதி ஆணைக்குழுவானது அனைத்து மாகாணங்களினதும் வருடாந்த அபிவிருத்தி திட்டங்களை அமுல்படுத்துவதற்கு அவர்களின் ஒப்புதல்களுடன் சில திருத்தங்களை மேற்கொண்டு செயற்படுத்த தனது இணக்கப்பாட்டினை வழங்கியுள்ளது.

**4. நிதி ஆணைக்குழுவினது வருடாந்த அறிக்கை – 2016/2017**

நிதி ஆணைக்குழுவினது 2016ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை மும் மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கும் மற்றும் பாராளுமன்றிற்கும் சமர்ப்பிக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை தயாராகிக்கொண்டிருக்கிறது.



நிதி ஆணைக்குழுவினது 2016ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை மாண்புமிகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கு அவர்களது ஜனாதிபதி செயலகத்தில் பெப்ரவரி 15 ஆம் திகதி 2018 இல் கையளிக்கப்பட்டது. நிதி ஆணைக்குழுவினது வருடாந்த அறிக்கையானது நிதி ஆணைக்குழுவினது தலைவர் உதித்த பலிககார, மத்திய வங்கி ஆளுனர் கலாநிதி. இந்திரஜித் குமாரசுவாமி, திறைசேரியின் செயலாளர் கலாநிதி.ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, திரு.வீ.கனகசபாபதி பேராசிரியர் எச்.எம்.ஸபருல்லா மற்றும் செயலாளர் ஏ.ரி.எம்.யு.டி.பி.தென்னக்கோன் ஆகியோரால் கையளிக்கப்பட்டது.

**5. மாகாண கணக்காய்வு அறிக்கைகளை தயாரித்தல்**

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது திணைக்களத்திலிருந்து வடமேல் மற்றும் தென் மாகாணங்களின் கணக்காய்வு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் முறையாக ஆய்வு செய்யப்பட்டு ஆராயப்பட்டு நிதி ஆணைக்குழுவினது அவதானிப்புகள் மாகாணங்களினது பிரதம செயலாளர்களுக்கு மாகாணங்களின் பொறுப்புடமையை மேம்படுத்துவதற்காக அனுப்பிவைக்கப்பட்டது.

**06. நிதி ஆணைக்குழுவிற்கான புதிய அலுவலகக் கட்டிட நிர்மாணம்**

நிதி ஆணைக்குழுவானது புதிய அலுவலக கட்டிட கட்டுமானம் முன்னேற்றகரமாக உள்ளது.பன்னிரெண்டு முன்னேற்ற மீளாய்வுக்கூட்டங்கள் நிதி ஆணைக்குழுவிலும் மாதாந்த தொழில்நுட்ப கூட்டங்கள் திட்ட ஆலோசனைப்பிரிவு (மொரட்டுவ பல்கலைக்களக கட்டட நிர்மாண பீடம்)மற்றும் ஒப்பந்தகாரர் பங்களிப்புடனும் இடம் பெற்றது. 2018 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 180 மில்லியனில் ரூபா 14.7 மில்லியன் முதற் காலாண்டுப் பகுதியில்

செலவிடப்பட்டுள்ளது. இச் செயல்திட்டமானது 96 நாட்கள் முன்னோக்கி அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடப்பட்டுள்ளது. கட்டுமான பணியானது 2018 ஆம் ஆண்டின் மே மாதத்தில் முடிவடையும்.





**07. நிதிஆணைக்குழுவின் தரவுத்தளம் மற்றும் தரவுமுறைமை முகாமைத்துவம் (Data base and Management Information System) -MIS**

நிதிஆணைக்குழுவினது பயன்பாட்டிற்கான தரவுத்தளம் மற்றும் தரவு முறைமை முகாமைத்துவத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஆசியாபவுன்டேசன் மற்றும் கொழும்பு பல்கலைக்கழக கணனிப்பாடசாலையுடன் பல்வேறு தொடர் கலந்துரையாடல்களை மேற்கொண்டது. இதன் காரணமாக புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடத் திட்டமிடப்பட்டது. நிதிஆணைக்குழுவின் செயலாளர் இவ் ஒப்பந்தத்தினை அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் என்ற வகையில் கைச்சாத்திட்டார் இப் புரிந்தணர்வு இணக்கப்பாட்டு ஒப்பந்தம் ஆசியாபவுன்டேசனின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களின் கைச்சாத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதேவேளை கொழும்பு பல்கலைக்கழக கணனிப்பாடசாலை நிதிஆணைக்குழுவின் மீண்டெழும் செலவுகள் மற்றும் மாகாண வருமானம் சம்மந்தமான ஆய்வினை ஆரம்பித்துள்ளது.

**08. உள்ளகக்கணக்காய்வுக் குழு**

முதற்காலாண்டுக்கான உள்ளகக்கணக்காய்வுக் குழு கூட்டம் பெப்ரவரி 27 ஆம் திகதி 2018 இல் கணக்காய்வாளர் அதிபதி மற்றும் பணிப்பாளர், கணக்கீட்டுமுகாமைத்துவ திணைக்களத்தின் பங்கு பற்றலுடன் இடம்பெற்றது கலந்துரையாடல்களின் முடிவுகள் நிதி ஆணைக்குழுவின் அனைத்து அலுவலர்களு பின் தொடர் நடவடிக்கையினை எடுப்பதற்காக அறிவிக்கப்பட்டதுடன் நிதிஆணைக்குழு ஒழுங்கு படுத்தப்பட்ட அம்சங்களுடனும் செயல்திறன் அம்சங்களுடனும் செயற்பட வேண்டுமென தீர்மானித்தது.

**09.மேதகு ஜனாதிபதியினது பரிந்துரைகளின் பின் தொடரல்கள்**

நிதி ஆணைக்குழுவின் தலைவரின் வேண்டுகோளுக்கு இணங்க ஜனாதிபதியினது செயலாளர் திரு ஒஸ்ரின் பெர்ணாண்டோ ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட பரிந்துரைகளை பற்றி கலந்துரையாட நியமனம் வழங்கப்பட்டது. அத்துடன் செயலாளர், மாகாண சபைகள் மற்றும்

உள்ளூராட்சி சபைகள் மற்றும் மத்திய அமைச்சு, மாகாண சபைகளின் தொடர்பான அலுவலர்களுடன் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் சம்மந்தமாக கலந்துரையாட கூட்டமொன்றை நடாத்தவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

**10.சுயாதீன ஆணைக்குழுக்களினது விடயங்கள் சம்மந்தமான கலந்துரையாடல்**

2018 ஆம் ஆண்டு பெப்ரவரி 02 ஆம் திகதி ஜனாதிபதியினது செயலாளர் திரு ஒஸ்ரின் பெர்ணாண்டோ அழைப்பின் பேரில் ஜனாதிபதியின் செயலகத்தில் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளுடன் சந்திப்பொன்று நடைபெற்றது இதில் நிதி ஆணைக்குழுவின் செயலாளரும் பங்கு பற்றினார். இக் கூட்டத்தின் பிரதான நோக்கம் அனைத்து பிரதிநிதிகளும் ஆணைக்குழுக்களின் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடவும் விவாதிக்கவும் அவசியமான பரிந்துரைகள் செய்யவும் ஒரு வாய்ப்பை வழங்குவதாகும்.

**11. நிதி ஆணைக்குழுவினது செயலாற்றுகை அறிக்கை**

2017 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டுக்கான நிதி ஆணைக்குழுவினது செயலாற்றுகை அறிக்கை 10 ஆம் திகதி ஜனவரி 2018 இல் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**12.அலுவலர்களது இயலளவு விருத்தி**

**12.1. விருந்தினர் விரிவுரை**

பின்வரும் விருந்தினர் விரிவுரையாளர்கள் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்காக விளக்கங்களை அளித்தார்கள்

| இல. | பெயர் | தலைப்பு | திகதி |
|---|---|---|---|
| 01 | பேராசிரியர் ஶ்ரீ.ஹெட்டிஹே<br>சமூகவியல் திணைக்களம் கொழும்பு பல்கலைக்கழகம் | தொலைநோக்கு 2025 | 02 ஆம் திகதி ஜனவரி 2018 |
| 02 | திரு.டி.என்.எஸ்.குருப்புமுல்லே<br>தலைமை நிறைவேற்று அதிகாரி மற்றும் பணிப்பாளர் இன் எக்ஸ்போ தரப்படுத்தல் நிலையம் மற்றும் முன்னாள் புடவைகள் மற்றும் ஆடைகள் நிலையத்தின் பணிப்பாளர் | காலம் மற்றும் மன அழுத்த மேலாண்மை | 05ஆம் திகதி 2018 |
| 03 | திரு.ஆர்.எம்.எஸ்.பி.ரத்னாயக்க,<br>போக்குவரத்து காவலர், பம்பலப்பிட்டி | சாலை பாதுகாப்பு விழிப்புணர்வுத்திட்டம் | 30ஆம் திகதி ஜனவரி 2018 |

| | | | |
|---|---|---|---|
| 04 | திரு.டேவிட் பாக்ஸ்டா்,<br>நிபுணா் -˙ USAID | தனியாா்பொது கூட்டு | 01ஆம் திகதி ஜனவாி 2018 |
| 05 | டாக்டா்.பி.ஏ.கிாிவந்தெனிய,<br>முன்னாள் தலைவா், சனச அபிவிருத்தி வங்கி | கிராமிய அபிவிருத்தியில் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியின் கடன் வசதி தாக்கம் | 07ஆம் திகதி பெப்ரவாி 2018 |
| 06 | திரு.டபிள்யு.சி.தீரசேகர,<br>இலங்கையின் வெளிநாட்டு கூட்டுறவுக்கான சா்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் (IFPRI) மற்றும் முன்னாள் செயலாளா் கைத்தொழில் அமைச்சு | மாகாண சபைகளினூடாக உணவு மதிப்பீட்டுச் சங்கிலி அபிவருத்தி திட்டங்களுக்கு முன்மொழிவுகளை அமுல் படுத்தல் | 06ஆம் திகதி மாா்ச் 2018 |
| 07 | திரு.லக்ஸ்மன் ஜயசேகர,<br>திட்ட பணிப்பாளா் மேற்கு பிராந்திய பாாிய பொலிஸ் அபிவிருத்தி திட்டம் | மேல் மாகாண பிராந்தியத்தின் மெகா பொலிஸ் அபிவிருத்தி திட்டங்களின் மேலோட்டம் | 13ஆம் திகதி மாா்ச் 2018 |




திரு.ஆா்.எம்.எஸ்.பி.ரத்னாயக்க,
போக்குவரத்து காவலா், பம்பலப்பிட்டி




திரு.டேவிட் பாக்ஸ்டா்,நிபுணா்,USAID



டாக்டர்.பி.ஏ.கிரிவந்தெனிய,

முன்னாள் தலைவர் சனச அபிவிருத்தி வங்கி



திரு.டபிள்யு.சி.தீரசேகர

வெளிநாட்டுகூட்டுறவுக்கான சர்வதேச ஆராய்ச்சிநிறுவனம்(IFPRI)மற்றும் முன்னாள் செயலாளர் கைத்தொழில் அமைச்சு



திரு.லக்ஸ்மன் ஜயசேகர
திட்ட பணிப்பாளர்



பேராசிரியர் ஸ்ரீ.ஹெட்டிஹே
சமூகவியல் திணைக்களம் கொழும்பு பல்கலைக்கழகம்

### 12.2. ஊழியர்களது கற்கை

நிதி ஆணைக்குழுவின் பின்வரும் ஊழியர்கள் தங்களது கற்கை சம்மந்தமாக பின்வரும் முன்வைப்புக்களை சமர்ப்பித்தனர்

| இல. | பெயர் | தலைப்பு |
|---|---|---|
| 01 | திரு.ஆர்.ஏ.எஸ்.கே.ரணசிங்க,தலைமை கணக்காளர் | மாகமணங்களின் வருமான உருவாக்கம் |
| 02 | திரு.எஸ்.எம்.ஆர்.பண்டார, பணிப்பாளர் கொள்கை மற்றும் ஆராய்ச்சி வெளியீடுகள் | நிதி ஆணைக்குழுவின் பங்கு 2025ஆம் ஆண்டுக்கான தொலை நோக்கை அறிமுகப்படுத்தல் |
| 03 | திரு.நிசாந்த சுஜீவ, உதவிப் பணிப்பாளர் | நாட்டின் பொருளாதாரம் - 2017 |

| | | |
|---|---|---|
| 04 | திருமதி.எராந்தி குணசேகர, உதவிப்பணிப்பாளர் | 2025 தொலை நோக்கு |
| 05 | திருமதி.நவோதினி அபயசூரிய, அபிவிருத்தி உத்யோகத்தர் | மூலதன செலவுகள் |
| 06 | திரு.மங்களபண்டார, உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | இலங்கையின் விவசாயத்துறை |

### 13. சம பிராந்திய அபிவிருத்திக்கான கொள்கைப் பரிந்துரை சம்மந்தமான கூட்டம்

2017 ஆம் ஆண்டு மார்ச் 13 ஆம் திகதி நிதி ஆணைக்குழுவில் தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் நிதிக்கொள்கை புள்ளிவிபர மற்றும் மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி மற்றும் பிராந்திய பணிப்பாளர்களுடன் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தின் முக்கிய நோக்கமானது நிதி ஆணைக்குழுவின் நிதி பகிர்ந்தளிப்பு முறையின் அவதானிப்புக்களைப் பெற்றுக்கொள்ளவும் ஏனைய நிறுவனங்களின் ஒன்றிணைந்த தகவல்களைப் பகிர்ந்து கொண்டு நன்மை அடைவதுமாக இருந்தது.

### 14. 2018 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டம்

2018 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டம் மூலோபாயத் திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு ஏற்கனவே ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### 15. மூலோபாயத்திட்டத்தினை மீளாய்வு செய்தல்

நிதி ஆணைக்குழுவினது மூலோபாயத்திட்டமானது ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டின் தந்திரோபாயத்திட்டத்துடன் இணைந்த ஆண்டுக்கான செயற்பாட்டுத்திட்டம் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டது.

### 16. நிதி ஆணைக்குழுவினது சட்டவரைபு மாதிரி

சட்டவரைபு தயாரிக்கப்பட்டு மாண்புமிகு ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஜனாதிபதி செயலகம் தனது அவதானங்களை வழங்கியதுடன் நிதி ஆணைக்குழு இதற்கு பதிலளித்திருந்தது. இதன் விளைவாக நிதி ஆணைக்குழுவின் சட்டவரைபு தயாரிப்பதற்கான அங்கிகாரத்தக்கான கடிதம் ஜனாதிபதி அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் சட்டரீதியான சட்டவரைபை அறிமுகப்படுத்த சட்டவரைபு ஆலோசகரிடம் அறிவுறுத்தப்பட்டது.

**17. தொரவ கிராமத்திற்கான நீர் வழங்கல் திட்டம்**

நிதி ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களும் மேல்மாகாண சபை உத்தியோகத்தர்களும் இணைந்து கம்பஹா மாவட்டத்தில் உள்ள தொரவ கிராமிய நீர் வழங்கல் திட்டத்தினை பார்வையிடுவதற்காக 15ஆம் திகதி 2018 இல் ஓர் விஜயத்தினை மேற்கொண்டனர். இத்திட்டத்தின் நீர்த்தாங்கிகள் சமுதாய நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுளளன.



இங்குள்ள பிரச்சினை என்னவெனில் நீர் மட்ட சுவர்களில் நீர்ப் பற்றாக்குறை காணப்படுவதாகும். எனவே இச் செயல்திட்டத்திற்கு மாற்று நீர் மூலம் அவசியம். மேல் மாகாண சபை இப்பிரச்சினைக்கு சரியான தீர்வை அடையாளம் காண வேண்டும்.

**18. சிறப்பு கற்கைகள்**

நிதி ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு அமைவாக பல சிறப்பு கற்கைகள் மேற்கொள்ளப்பட்டன அவை பின்வருமாறு

- புதிய நிதி பகிர்ந்தளிப்பதற்கான சூத்திரத்தை அபிவருத்தி செய்தல்
- இலங்கையில் அரசாங்கங்களுக்கிடையிலான நிதியிடல் உறவுகள்
- இலங்கையில் மாகாண வருமானம்
- மாகாண மீண்டெழும் செலவின தேவைப்பாட்டினை மதிப்பீடு செய்தல்
- மாகாண சபைகள் மாகாண அதிகார சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஆளணி

**19. பங்குபற்றல் கூட்டங்கள் கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி பட்டறைகள்**

நிதி ஆணைக்குழுவின் தலைவர் செயலாளர் மற்றும் மூத்த உத்தியோகத்தர்கள் பின்வரும் கூட்டங்கள் மற்றும் பயிற்சி பட்டறைகளில் பங்கு பற்றினார்கள்

- இலங்கையில் ஆர்வமுள்ளோரின் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி இலக்குகளின் SDG அடித்தள ஆரம்ப கூட்டம்
- உத்தியோகத்தர்களுக்க அவசியமான தலைமைத்துவ திறன்
- இலங்கையின் எதிர்காலம்
- உலக மற்றும் பிராந்தியத்தில் டிஜிடல் மாற்றுகையின் பங்கு வகிப்பு
- கணக்காய்வாளர் நாயகம் பொது ஆண்டறிக்கை – 2016

- சாலைவரைபடம் 2018 - இலங்கை மத்திய வங்கி
- இலங்கையின் டிஜிடல் பொரளாதார தந்திரோபாயம்
- துறைமுக நகரமும் இலங்கையின் எதிர்காலமும்
- மனித உரிமைகள் துறைக்கான குழு
- நகர திட்டமிடலும் அபிவிருத்தியும்
- உள்ளூராட்சி சபைகளுக்கு உறுதுணையான செயல்திட்டங்களின் ஆரம்ப நடவடிக்கைகளுக்கு ஆர்வமுள்ளவர்களின் சந்திப்பு
- இரண்டாவது சுகாதார துறையின் அபிவிருத்தி திட்டம்
- புறநெகும உள்ளூராட்சி மேம்பாட்டுத் திட்டம்
- வடக்கிற்கான வீதி இணைப்புத்திட்டம்
- வடக்கிற்கான வீதி இணைப்புத்திட்டம்
- வட மாகாண அபிவருத்தித் திட்டம்

**20. உதவிப் பணிப்பாளரின் ஆட்சேர்ப்பு**

26ஆம் திகதி மார்ச் 2018 இல் உதவிப் பணிப்பாளர் ஒருவர் நிதிஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்டார்

**21. ஆணைக்குழுவின் கூட்டங்கள்**

பின்வரும் ஆணைக்குழுவின் கூட்டங்கள் நடைபெற்றன

- 24ஆம் திகதி ஜனவரி 2018
- 22ஆம் திகதி பெப்ரவரி 2018
- ஒவ்வொரு ஆணைக்குழுவின் கூட்டத்திற்கு முன்னரும் ஆணைக்குழுவின் உப குழுக்கள் சந்திக்கும்
- கூட்டுக்குழு கூட்டங்கள் - வாரத்திற்கு ஒரு கூட்டுக்குழு கூட்டம் நடைபெற்றது